*திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.*
*வாரம் ஒரு நீதிக்கதை – 29.03.2026*

## *நமது அடையாளம்..!*

*அம்மா இராமுவின் முன்னாள் தமிழில் பேசக்கூடாது என்று உங்களிடம் பலமுறை சொல்லி இருக்கிறேன். நாளை அவனுக்கு ஒரு சர்வதேச பள்ளியில் சேர்க்கைக்கான நேர்காணல் இருக்கிறது அவன் அங்கே போய் வணக்கம்.. எப்படி இருக்கீங்க.. என்றோ அல்லது ராம் ராம் என்றோ சொன்னால் எனக்கு அவமானம் ஆகிவிடும்.*
*அந்தஸ்தும் நாகரிகமும் மட்டுமே அங்கு கருத்தில் கொள்ளப்படும் என்று தன் தாய் இலட்சுமியிடம் சற்று கோபத்துடன் கூறினான் சுரேஷ்.*

*கிராமத்திலிருந்து வந்த, தூய உள்ளூர் வட்டார மொழியை பேசுபவளுமான இலட்சுமி தன் மகனின் திட்டலைக் கேட்டதும் பேரனுக்கு ஊட்டுவதற்காக பையில் இருந்து எடுத்த லட்டுகளை அமைதியாக மீண்டும் உள்ளே வைத்து விட்டாள்.*

*வீட்டின் சூழல் இராணுவ பயிற்சி போல இருந்தது. சுரேஷ் அவன் மனைவி ரம்யா இருவரும் சேர்ந்து கடந்த ஒரு மாதமாக தங்களின் ஐந்து வயது மகன் ராமுவிற்கு ஆங்கிலத்தில் பேச வேண்டிய அடிப்படையான வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்து மனப்பாடம் செய்ய வைத்துக் கொண்டு இருந்தனர். நேர்காணல் முடியும் வரை இராமுவிடம் இருந்து விலகி இருக்க வேண்டும் என்று லட்சுமிக்கு கடுமையாக அறிவுறுத்தப்பட்டு இருந்தது.*

*மறுநாள் காலை சுரேஷ் ரம்யா மற்றும் ராமு மூவரும் அந்த சர்வதேச பள்ளிக்கு சென்றனர். அது மிகவும் புகழ்பெற்ற பள்ளியாக இருந்தது மிகவும் வசதி படைத்த மாணவர்கள் நீண்ட வரிசையில் நின்றிருந்தனர். அனைவரும் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தனர். சுரேஷ் ரம்யா இருவருக்கும் பதற்றமாக இருந்தது.*
*பிறகு அவர்கள் முறை வந்தது.*

*பள்ளி முதல்வரின் அறை மிகவும் பெரியதாக இருந்தது. முதல்வர் தனது கண்டிப்பான சுபாவத்திற்காகவே நன்கு அறியப்பட்டவர். அவர் ராமுவிடம் ஆங்கிலத்தில் சிலவற்றின் பெயர்களையும் வண்ணங்களையும் கேட்டார். ராமு மனப்பாடம் செய்திருந்த பதில்களைச் சொன்னான். சுரேஷ் ரம்யா இருவரின் முகத்திலும் புன்னகை.*

*இப்போது முதல்வர் தனது பேனாவை கீழே வைத்துவிட்டு, ராமுவின் கண்களை உற்றுப் பார்த்தார். அவனைப் பார்த்து தம்பி உன் வீட்டிற்கு ஒரு பெரிய விருந்தினர் வரும்போது அல்லது உன் தாத்தா பாட்டியை சந்திக்கும்போது முதலில் நீ என்ன செய்வாய் என்று கேட்டார்.*

*சுரேஷ் ரம்யா இருவரும் ஒரு நொடி அதிர்ந்து போயினர். காரணம் இது பற்றி அவர்கள் எதுவும் கற்றுக் கொடுக்கவில்லை. ராமு அமைதியாக இருந்தான் குட் மார்னிங் சொல்லும் படி சைகை காட்டினான் சுரேஷ். ராமு அதைச் செய்யவில்லை.*

*ராமு தன் நாற்காலியில் இருந்து இறங்கி மெதுவாக நடந்து முதல்வர் அருகில் சென்று அவரது கால்களை தொட்டு வணங்கினான். பின்னர் தன் இரு கைகளையும் கூப்பி வெகுளித்தனமாக வணக்கம் ஐயா.. ராம் ராம் என்று சொன்னான்.*
*அறையில் அமைதி நிலவியது. சேர்க்கை நிராகரிப்பு நிச்சயம் என்று சுரேஷ் மனதிற்கு தோன்றியது. அவன் தன் தாயின் மீது கோபப்படத் தொடங்கினான். இவை அனைத்தையும் தன் அம்மாதான் இவனுக்கு ரகசியமாக கற்றுக் கொடுத்திருக்க வேண்டும் என்று எண்ணினான்.*

*ஆனால் சுரேஷ் கற்பனைகூட செய்ய முடியாத ஒன்று அங்கு நடந்தது.*

*முதல்வர் உரக்க சிரிக்க தொடங்கினார். அவர் ராமுவை தூக்கி தன் மடியில் அமர்த்திக் கொண்டார். முதல்வர் கூறினார் மிஸ்டர் சுரேஷ் இன்று காலை முதல் நான் 55 மாணவர்களை நேர்காணல் செய்து உள்ளேன். அனைவரும் இயந்திரங்களைப் போல ஹாய் ஹலோ குட் மார்னிங் என்று தான் சொல்லிக் கொண்டிருந்தனர். ஆனால் உங்கள் மகன் செய்தது நமது கலாச்சாரத்தின் ஒரு பகுதி இந்த உயரிய பண்புகள் புத்தகங்களில் பெரிதும் காணப்படுவதில்லை என்று சொல்ல, சுரேஷ் திகைத்துப் போனான்.*
*முதல்வர் மேலும் தொடர்ந்தார்*
*இன்றய காலகட்டத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலேயர்களாக, நாகரிகம் மிக்கவர்களாக மாற்றும் பந்தயத்தில் தங்கள் சொந்த வேர்களை வெட்டிக் கொள்கிறார்கள்.*
*ஒரு குழந்தை பள்ளியில் ஆங்கிலம் கற்கும். ஆனால், பெரியவர்களின் கால்களைத் தொட்டு வணங்குவது… ராம் ராம் என்று சொல்வது… தன் தாய் மொழியில் பெருமிதம் கொள்வது… இவையெல்லாம் வீட்டில் தான் கற்றுக் கொள்ளப்படுகின்றன. இதையெல்லாம் உங்கள் மகனுக்கு யார் கற்றுக் கொடுக்கிறார்கள்? என்று ஆர்வமாக கேட்டார்.*

*ராமு உற்சாகமாக, " என் பாட்டி.." என்றான். மேலும், கல்வி பணிவை கொண்டு வரும் என்றும்.. தலை வணங்குவதே மிகச்சிறந்த கல்வி என்றும் என் பாட்டி சொல்வார்" என்றான்.*

*முதல்வர் சுரேஷை பார்த்து," தயவுசெய்து என் வணக்கங்களை உங்கள் அம்மாவிடம் தெரிவித்து விடுங்கள். அவருடைய பேரன் இன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான் என்றால், அதற்குக் காரணமும் அவர்தான் என்று சொல்லுங்கள்" என்றார்.*

*வீட்டிற்கு வந்ததும் சுரேஷ் நேராக சென்று தன் தாயின் கால்களை தொட்டு வணங்கினான்.*
*பதறிய தாய், " என்ன ஆச்சு சுரேஷ்.. நேர்காணல் சரியாக போகவில்லையா? என்று கேட்க*
*"இல்லை அம்மா… நேர்காணல் நன்றாக முடிந்தது. இராமுவிற்கு சேர்க்கையும் கிடைத்துவிட்டது. அதற்கு காரணம் நீங்கள் தான் அம்மா.." என்று சொன்ன சுரேஷின் கண்களில் கண்ணீர் தழும்பியது.*

*"என்னை மன்னித்து விடுங்கள் அம்மா. ஒரு மரம் எவ்வளவு உயரமாக வளர்ந்தாலும் அதன் வேர்கள் வெட்டப்பட்டால் அது காய்ந்து விடும் என்பதை நான் மறந்துவிட்டேன்" என்று சொன்ன சுரேஷ் தன் மகன் ராமுவை அழைத்து, " மகனே நீ பள்ளியில் என்ன செய்தாய்? என்று பாட்டியிடம் சொல்" என்றான்.*
*ராமு தன் பாட்டியிடம் பள்ளியில் நடந்ததை அப்படியே சொன்னதும் லட்சுமி தன் பேரனை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.*
*ஆடைகள் மற்றும் ஆங்கிலத்தால் ஒருவர் நவீனமாக ஆகலாம். ஆனால் நமது உயரிய பண்புகளாலும் அற நெறிகளாலும் மட்டுமே ஒருவர் மனிதனாக ஆக முடியும் என்பதை சுரேஷ் உணர்ந்தான்.*
*அன்று மாலை வீட்டிற்குள் நுழையும் போது சுரேஷ் தன் தாயைப் பார்த்து ஹாய் மாம் என்று அழைக்காமல் கைகளை கூப்பி ராம் ராம் என்றான்.*
*இலட்சுமியின் சுருக்கங்கள் நிறைந்த முகத்தில் தோன்றிய புன்னகை விலைமதிப்பற்றதாக தெரிந்தது சுரேஷின் கண்களுக்கு.*
*ஆங்கிலம் ஒரு மொழி.. ஒரு திறமை.. ஆனால், நமது தாய்மொழியும், பண்பாடும், கலாச்சாரமும்தான் நமது அடையாளம்.*
*தனித்துவமான நமது அடையாளங்களால் பெருமை கொள்வோம்.*